[1973 மார்ச் 17

மேட்டுநாவிதன்பாளைய அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 406. வினா—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு தாலுக்கா, மேட்டுநாவிதன்பாளையம் கிராமத்தில் அரிசனங்களுக்கு வீட்டு மனைக்காக சுமார் 10 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய 4(1) நோட்டீஸ் வெளியிடப்பட்டதா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

(உ) தற்போது அந்த நில ஆர்ஜிதம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) ஈரோடு வட்டம், மேட்டுநாசிவம்பாளையம் (மேட்டுநாவிதன் பாளையம்) கிராமத்தில் உள்ள அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக மேற்படி ஊரில் 10.80 ஏக்கர் புஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்ய மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட 4(1) முன்மொழிவு வரைவு அரசு வாலாய ஆணை எண் 1654, ச.ந., தேதி 22—6—1970-ல் ஏற்கப்பட்டு 31—5—1971 தேதியில் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

(உ) பிரிவு 5-ஏ விசாரணையின்போது நிலச் சொந்தக்காரர்கள் ஆட்சேபனை தெரிவித்ததாலும், அந்த ஆட்சேபணைகள் ஏற்கக்கூடியதாக இருப்பதாலும், திருத்திய செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அத்திருத்திய செயற்குறிப்பு வருவாய்த் துறை வாரியத்தின் மூலமாக அரசுக்கு வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கள் விற்பனை

* 407. வினா—திரு. என். கிட்டப்பா
திரு. என். கே. பழனிசாமி } மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளைப் பதனப்படுத்தி புட்டியில் அடைத்து விற்பனை செய்யும் கள பதனத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

1973 மார்ச் 17]

திரு. என். கே. பழனிசாமி : கள்ளுக்கடை, மற்ற சாராயக் கடைகளில் எல்லாம் சுகாதார வசதி மோசமாக இருப்பதனால், அதனை ஒழுங்குபடுத்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மூலக் கேள்வி கள்ளைப் பதனப் படுத்தும் தொழிற்சாலை பற்றியது. உறுப்பினர் தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : கள்ளைப் பதனப்படுத்தும் தொழிற்சாலை மைசூரில் பெருவாரியான லாபத்தை அளித்துக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்களே, இங்கும் அதைப்போல ஏற்படுத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மைசூர் மாநிலத்தைப்பற்றி எனக்குத் தகவல் இல்லை. இந்த ஆண்டு இங்கே அப்படிச் செய்யக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. மு. இரத்தனசபாபதி : சுண்ணும்பு கலக்காத பதனீர் உடம்புக்கு நலம் அளிப்பதனால் பாட்டில்களில் அத்தகைய பதனீரை அடைத்து விற்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கெனவே பதனீரை பாட்டில் களில் அடைத்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : க்வாலிடி கண்ட்ரோல் எப்படி செயல் படுகிறது ? ஏதாவது கேஸ்கள் பிடிபட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கள்ளோடு வேறு சில பொருள்களைக் கலந்து விற்கிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டு வழக்குகளும் போடப்பட் டிருக்கின்றன.

மது அருந்துவதால் விளையும் தீமைகள் குறித்த செய்திப்படம்

* 408 **வினா—திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மது குடிப்பதால் ஏற்படும் தீமைகளை விளக்கி செய்திப்படம் மூலம் பிரச்சாரம் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. கா. காளிமுத்து : மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டுள்ளதால் ஏற் பட்டுள்ள நிலைமையைக் கருதி மீண்டும் அதனை அமல்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?